கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 18ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.7/2025
இன்
அசல் வழக்கு எண்.206/2010
----

1) பழனிச்சாமி என்ற ராஜா(இறப்பு)
2) செல்வி
3) செந்தில்
4) கார்த்திகா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

வேல்விழி ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இறுதியாக இம்மனுவானது 11.09.2025ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும் இருந்த வழக்கில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை

செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டி கட்டளை 7 விதி 14(3)ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:–

1.1) அசல் வழக்கானது பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியாக முத்து என்பவரை விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும், அவருடைய மனைவி சீதாலட்சுமி மற்றும் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து, தாவா சொத்திற்கு கிழக்கே உள்ளது என்றும், மேற்படியார்கள் திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.595/2008 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கின் ஆணையர் அறிக்கை, தீர்ப்புரை, தீர்ப்பாணை மற்றும் மெட்ராஸ்

உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நடைபெற்ற ரிட் மனுவையும் வா.சா.2 மூலம் வாதிகள் தரப்பு ஆவணங்களாக அசல் வழக்கில் குறியீடு செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், அசல் வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**3) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்கள்/வாதிகள் தனது மனுவில், வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியாக முத்து என்பவரை விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும், அவருடைய மனைவி சீதாலட்சுமி மற்றும் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து, தாவா சொத்திற்கு கிழக்கே உள்ளது என்றும்,

மேற்படியார்கள் திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.595/2008 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கின் ஆணையர் அறிக்கை, தீர்ப்புரை, தீர்ப்பாணை மற்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நடைபெற்ற ரிட் மனுவையும் வா.சா.2 மூலம் வாதிகள் தரப்பு ஆவணங்களாக அசல் வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்றும், மேற்படி ஆவணம் வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றும், எனவே அசல் வழக்கில் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

3.2) அசல் வழக்கில் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வது அவசியமானது என்றும், மேற்படி ஆவணம் முக்கியமான ஆவணம் என்றும், எனவே மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டும் என்றும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூறும் வாதத்தை ஏற்றும், மேற்படி வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி ஆவணம் குறியீடு செய்யவேண்டியது அவசியமானதாக உள்ளது என்பதை கருத்தில்கொண்டும், மேற்படி ஆவணத்தை வழக்கு கோப்பில் சேர்ப்பதால் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு

காரணியாக அமையுமே தவிர, இம்மனுவினை அனுமதிப்பதினால் தரப்பினர்கள் யாருக்கும் எவ்வித சாதக பாதகமும் இருக்காது என்பதை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.18 17:47:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

<u>**இணைப்பு:**</u>
சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.18 17:47:57 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.7/2025
இன்
அசல் வழக்கு எண்.206/2010
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 18.09.2025